பதிவு எண். M. 6511 ★ தொலைபேசி: 51881 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 16 (31—7—68) புதன் ★ வெளியூர்: ஆடி 17 (1—8—68) வியாழன் [இதழ்: 40

## வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட இழப்பு

★

புதுடில்லி, சூலை 30 — "அண்மையில் தென் பகுதி தென் மத்திய பகுதி இரயில்வேக்களில் பயர்மேன்கள் வேலை நிறுத்தம் செய்ததன் விளைவாக ரூ. 163 இலட்சம் வரை இழப்பு ஏற்பட்டிருக்கிறது"

என்று இரயில்வே அமைச்சர் பூனச்சா, மக்களவையில் தெரிவித்தார்.

# வட்டக் கழகம்---பெருநகரக் கழகம்

## ஆகிய அமைப்புக்களின் தேர்தல்

### 3--8--68 சனி பிற்பகல் 3-மணி

| மாவட்டம் | வட்டம்—பெருநகரம் | தேர்தல் நடைபெறும் இடம் | ஆணையாளர் |
|---|---|---|---|
| செங்கற்பட்டு | காஞ்சி (பெருநகரம்) | சண்முகம் நினைவு மன்றம் | வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ |
| | சைதை வட்டம் | வில்லிவாக்கம் பள்ளி | வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல். எம்.எல்.சி. |
| | உத்திரமேரூர் | பயணிகள் விடுதி உத்திரமேரூர் | சு. பாலன் எம்.சி. |
| வட ஆற்காடு | வேலூர் | பயணிகள் விடுதி, ஆம்பூர் | லோகநாதன் எம் சி. |
| | போளூர் | பயணிகள் விடுதி, போளூர் | கோ. இளவரசு எம்.சி. |
| | செங்கம் | பயணிகள் விடுதி, செங்கம் | இரா. சடகோபன் எம்.சி. |
| | வாலாசா | பயணிகள் விடுதி, இராணிப்பேட்டை | கே. எஸ். தினகரன் |
| | திருப்பத்தூர் | பயணிகள் விடுதி, திருப்பத்தூர் | எம். கமலநாதன் எம்.பி. |
| தெ. ஆற்காடு | செஞ்சி | பயணிகள் விடுதி, செஞ்சி | சைதை சம்பந்தம் எம்.சி. |
| | விழுப்புரம் | ,, ,, விழுப்புரம் | ஆர். டி. பாஸ்கரன் எம்.சி. |
| | விருத்தாசலம் | ,, ,, விருத்தாசலம் | கோவை செழியன் பி.ஏ. |
| | திருகோயிலூர் | ,, ,, திருக்கோவிலூர் | என். எஸ். தேவராசன் |
| புதுவை | புதுவை பெருநகரம் | திருமண மண்டபம், 33, அம்பலத்தாடு ஐயர் மடத் தெரு, புதுவை | க. பார்த்தசாரதி எம்.சி. |
| தஞ்சை | தஞ்சை | கழகக் கட்டிடம், திருவையாறு | அன்பில் தர்மலிங்கம் |
| | குடந்தை | பயணிகள் விடுதி, குடந்தை | அ. பொ. அரசு எம்.எல்.ஏ. |
| | நன்னிலம் | விவேகானந்தா வாசகசாலை, நன்னிலம் | ந. கணபதி பி.எஸ்சி., பி.எல். |
| | அறந்தாங்கி | பயணிகள் விடுதி, அறந்தாங்கி | ஏ எஸ். இராமன் எம்.சி. |
| | மாயூரம் | ,, ,, மாயூரம் | எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி. |
| | திருத்துறைப் பூண்டி | ஏ. எல். ஏ. அகமது கட்டிடம், திருத்துறைப்பூண்டி | சா. கணேசன் எம்.சி. |
| | ஒரத்தநாடு | குமரி பிரஸ், ஒரத்தநாடு | ஜி. நீலமேகம் பி.எஸ்சி , பி.எல். |
| திருச்சி | திருச்சி | தமிழ்ச் சங்கக் கட்டிடம் (மேலப் புலிவார் ரோடு) | என். கிட்டப்பா எம்.எல்.ஏ. |
| | லால்குடி | சாந்தி தியேட்டர், பூவாளூர் | டி. என். கிருஷ்ணன் எம்.சி. |
| | செயங்கொண்டம் | பயணிகள் விடுதி, செயங்கொண்டம் | பெரம்பூர் மாசிலாமணி |
| | முசிறி | ,, முசிறி | கே. எம். கண்ணபிரான் |
| | மணப்பாறை | ,, மணப்பாறை | புருடோத்தமன் எம்.சி. |
| | திருமயம் | ,, திருமயம் | எம். கன்னியப்பன் எம்.சி. |
| தருமபுரி | தருமபுரி | ,, அதமன்கோட்டை | ந. செயராமன் |
| | ஓசூர் | ,, ஓசூர் | ஆ. மு. நாராயணன் |
| சேலம் | சேலம் | விசயராகவாச்சாரியார் திடல், சேலம் | வை. இரத்தினவேலு பி.ஏ. |
| | ஆத்தூர் | ஆறுமுகனூர் மன்றம், ஆத்தூர் | ப. க. வேணுகோபால் |
| | நாமக்கல் | பி. எஸ். ஆர். திடல், நாமக்கல் | ஓ. எஸ். பாலசுந்தரம் |
| | சங்ககிரி | பயணிகள் விடுதி, சங்ககிரி | கே. பி. காமாட்சி |
| | சேலம் நகரம் | விசயராகவாச்சாரியார் திடல், சேலம் | கந்தசாமி பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ. |
| கோவை | கோபி | நெடுஞ்சாலைத் துறை பயணிகள் விடுதி, கோபி | கோ. செங்குட்டுவன் |
| | அவிஞசி | பயணிகள் விடுதி, அவிஞசி | நீலநாராயணன் |
| | தாராபுரம் | ,, தாராபுரம் | முத்துராமலிங்கம் |
| | உடுமலை | ,, உடுமலை | டி. கே. கபாலி எம்.சி. |
| | பவானி | ஆனந்தா ரைஸ் மில், பவானி | எ. செல்வராஜ் எம்.சி. |
| | பல்லடம் | பயணிகள் விடுதி, பல்லடம் | மு. வரதராசன் |
| மதுரை | மதுரை வடக்கு | சமயநல்லூர் | மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி. |
| | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் திருமண மண்டபம் | டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம்.எல்.சி. |
| | திருமங்கலம் | பயணிகள் விடுதி, திருமங்கலம் | கோமகன் |
| | திண்டுக்கல் | ,, செம்பட்டி | க. அன்பிற்கரசன் எம்.சி. |
| | நிலக்கோட்டை | ,, கோடை ரோடு | இலட்சுமிபதி எம்.சி. |
| | கொடைக்கானல் | ,, கொடைக்கானல் | கே. பாஸ்கரன் எம்.சி. |
| | வேடசந்தூர் | பயணியர் விடுதி, வேடச்சந்தூர் | குளித்தலை முத்துகிருஷ்ணன் |
| | உசிலம்பட்டி | ,, ,, உசிலம்பட்டி | வேணுகோபால் எம்.சி. |
| முகவை | இராமநாதபுரம் | ,, ,, இராமநாதபுரம் | எஸ். வி. வேலு |
| | சிவகெங்கை | ,, ,, சிவகெங்கை | தமிழ்மணி எம்.சி. |
| | சாத்தூர் | ,, ,, சாத்தூர் | சுப்பிரமணியம் எம்.சி. |
| | முதுகுளத்தூர் | ,, ,, முதுகுளத்தூர் | தி. சு. நல்லதம்பி எம்.சி. |
| நெல்லை | நெல்லை | குறுக்குத்துறை திருமணமண்டபம் | இரா. சம்பந்தம் எம்.சி. |
| | திருவைகுண்டம் | பயணியர் விடுதி, திருவைகுண்டம் | காட்டூர் கோபால் |
| | சங்கரன்கோவில் | ,, ,, சங்கரன்கோயில் | காஞ்சி மணிமொழியார் |
| | திருச்செந்தூர் | ,, ,, திருச்செந்தூர் | குமார் |
| | தென்காசி | திவான் பங்களா, குற்ருலம் | மா. தங்கவேலர் |
| | செங்கோட்டை | பயணியர் விடுதி, செங்கோட்டை | நாகராசன் எம்.சி. |
| குமரி | நாகர்கோயில் வட்டம் | தெங்கம்புதூர் தியேட்டர், அகத்தீஸ்வரம் | கே. கோவிந்தசாமி எம்.சி. |
| | கல்குளம் | சேது டாக்கீஸ், தக்கலை | பி. கே. துரைக்கண்ணு |
| நீலகிரி | குன்னூர் | பயணியர் விடுதி, குன்னூர் | சிவகுமார் |

[4--8--68-ம் நாள் நடைபெறும் தேர்தல்கள் பற்றிய விவரம் 4-ம் பக்கத்தில் பார்க்கவும்]

# மாவட்டக்கழகத்தேர்தல்

## 14--8--68: புதன்கிழமை

**பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி, (தி. மு. க.) மாவட்டக் கழகத் தேர்தல் 14--8--68 அன்று எல்லா மாவட்டங்களிலும் முறைப்படி நடைபெறும்.**

மாவட்டக் கழக அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகிய பொறுப்புக்களுக்குப் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் --- அதற்குரிய கட்டணத் தொகையான பத்து ரூபாயுடன் --- விண்ணப்பத் தாள்களை 5 8—68-ம் நாளிலிருந்து 8—8 68-ம் நாள் மாலை 7-மணிக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்பிவைக்க வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வேட்பாளரை முன்மொழிபவரும், வழிமொழிபவரும், சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும்.

வேட்பாளர் விண்ணப்பத் தாள் தலைமைக் கழகத்திலும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் --- வட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோரிடத்திலும் கிடைக்கும்.

'அறிவகம்', சென்னை-13
31—7—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

# தி. மு. க. வட்டக் கழகத் தேர்தல்

## ஆணையாளர்களுக்கான குறிப்புகள்

1. ஆகஸ்டு 3, 4-ஆகிய நாட்களில் நடைபெறும் வட்டக் கழகம், வட்டக் கழகத் தகுதி படைத்த பெருநகரக் கழகம் ஆகிய அமைப்புக்களுக்கான தேர்தல்களை நடத்திவைக்கும் ஆணையாளர்களைத் தலைமைக் கழகம் அந்தந்த வட்டத்திற்கு அனுப்பிவைக்கும்.

2. அந்தந்த வட்டம் --- வட்டக் கழகத் தகுதிபடைத்த பெருநகரக் கழகத் தேர்தல்கள், மாவட்டச் செயலாளரால் குறிப்பிடப்பட்ட இடங்களில் நடைபெறும்.

3. அந்தந்த வட்டக் கழகத் தேர்தலில் போட்டியிடத் தலைமைக் கழகத்திற்குக் குறிப்பிட்ட நாட்களில் விண்ணப்பத் தாள் அனுப்பி முறைப்படி பரிசீலனை செய்து தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களும், அவர்கள் போட்டியிடும் பொறுப்புகளும், தலைமைக் கழகத்தால் ஆணையாளரிடம் கொடுக்கும் பட்டியலில் காணப்பெறும். அந்தப் பட்டியலில் கண்டுள்ள வேட்பாளர் விவரங்களை மட்டுமே ஆணையாளர், தேர்தல் நடைபெறும் இடத்தில் முறைப்படி தேர்தல் துவக்கப்படுவதற்கு 2-மணி நேரம் முன்னதாக -- தமிழ் அகர வரிசைப்படி -- அதற்கென வாயிலில் வைக்கப்படும் பலகையில், கூடியுள்ள பிரதிநிதிகள் அனைவரும் தெளிவாகக் காணும் வகையில் எழுதி அறிவிப்பார்.

4. தேர்தல் நடைபெறும் இடத்தில் -- தேர்தலின்போது -- அந்தந்த வட்டத்தைச் சார்ந்த கிளையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுத் தலைமைக் கழகத்திலிருந்து ஆணையாளர் கொண்டு வரும் பட்டியலில் கிளைவாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதிகள் மட்டுமே கூடியிருத்தல் வேண்டும். கூடியுள்ள பிரதிநிதிகளிலிருந்து எந்தப் பொறுப்புக்கும் போட்டியிடாத தோழர்கள் சிலரை ஆணையாளர் தமக்கு உதவியாக நியமித்துக்கொள்ளலாம்; அவர்கள், ஆணையாளர் சொல்வதைச் செய்ய வேண்டியவர்களாவர்.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆடி 16 (31—7—68) புதன்

# வருந்துவாரா? வாய் மூடுவாரா?

தமிழகத்தில் கழக ஆட்சி ஏற்பட்டிருப்பதன் விளைவாக அனைத்திந்திய மட்டத்தில் தமக்கிருந்துவந்த அரசியல் செல்வாக்கை இழந்து தவித்துக்கொண்டிருப்பவர் காமராசர் அவர்களாவார். அந்த அரசியல் செல்வாக்கு, தானாகக் காமராசர் அவர்களைத் தேடி வந்துவிடவில்லை.

அச்செல்வாக்கைப் பெறக் காமராசர், படாத பாடுபட்டிருக்கின்றார். துவக்கக் காலத்திலிருந்து தம்முடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று சரிசமமாக உழைத்தவர் பலரையும், பழிபாவத்துக்கு அஞ்சாமல் பலி வாங்கி அனைத்திந்திய அரசியல் வானில் தமக்கென உயர்ந்ததோர் இடத்தை எட்டிப்பிடித்தவர் காமராசர் அவர்கள். முறையற்ற முறைகள் அனைத்தையும் கையாண்டு எட்டிப்பிடித்துக்கொண்ட அந்த உயர்ந்த இடம், தம்மை விட்டுப் போய்விடாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு காங்கிரசு அமைப்பை மற்றவர்கள் நுழையக்கூடாத பாதுகாக்கப்பட்ட அமைப்பாக வைத்துக்கொள்ளுவதிலும் தம் முழு முயற்சியையும் செலவழித்திருக்கின்றார் காமராசர் அவர்கள்.

உதட்டில் உறவும் உள்ளத்தில் கொடும் பகையும் கொண்டிருந்த பலர், அவரை எப்படிக் கவிழ்ப்பது—அவர் பெற்றிருக்கின்ற செல்வாக்கை எப்படிச் சிதைப்பது—எனத் திட்டமிட்டுக்கொண்டே அவரைச் சுற்றிவந்து அவர் புகழ் பாடிக்கொண்டிருந்தனர். காங்கிரசுக் கூடாரத்திலேயே குழுமியிருந்த இந்த நல்லவர்களால், காமராசர் அவர்களை வீழ்த்தவும் முடியவில்லை—அவர்தம் செல்வாக்கைச் சரிக்கவும் முடியவில்லை.

தமது கட்சிக்குள்ளாகவே தமது புகழ் பாடிக்கொண்டிருக்கின்ற பலர், தம்மைக் கவிழ்க்க முயற்சித்துவருகின்றனர் என்ற உண்மை காமராசர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். உண்மை தெரிந்திருந்தாலும், அம்முயற்சியை அவர் அலட்சியமாகவே கருதிவந்தார்.

ஆனால், அரசியல் உலகில் தாம் பெற்றிருக்கக்கூடிய ஏற்றத்தைத் தரைமட்டமாக ஆக்கக்கூடிய ஆற்றல் முன்னேற்றக் கழகத்துக்கும், கழகப் பெருங்காவலர் அண்ணா அவர்களுக்கும்தான் உண்டு என்ற அரசியல் உண்மை, காமராசர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். உண்மையைத் தெரிந்துகொண்டிருந்த காரணத்தினாலேயே, கழகத்தை வளரவிடாமல் பார்த்துக்கொள்ளுவதில் மிகுந்த கருத்தைச் செலுத்தலானார் அவர். 'கழகத்தை அழித்து விட வேண்டும்' என்ற தமது முடிவை, கழகத் தலைமையை மயக்கி இலகுவாக நிறைவேற்றிக்கொள்ளலாம் என காமராசர் மனப்பால் குடித்தார். வெற்றியா கிடைத்தது? இல்லை--தோல்வியைத்தான் கண்டார் காமராசர்!

கழகம் வளர வளர--வலிவு பெறப் பெற--அரசியல் வீழ்ச்சி தம்மைச் சிறுகச் சிறுக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் காமராசர் உணரலானார். ஒரு பொதுத் தேர்தலுக்கும்---மற்றொரு பொதுத் தேர்தலுக்குமிடையிலிருக்கின்ற ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும், தம்முடைய அரசியல் வாழ்வு, 'வீழ்ச்சியை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது' என்ற அரசியல் பாடத்தைக் காமராசர் அவர்கள் காணத் தவறவில்லை.

கழகம் துவங்கிய நாள் தொடங்கி இன்றுவரை கழகத்தை அழிக்கத் தாம் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகள் அனைத்தும் முழுத் தோல்வியையே கண்டுள்ளன என்பதைத் தெரிந்துகொண்டிருப்பதுடன், தாம் எடுத்துவந்த முயற்சி அனைத்தும் கழகத்தை அழிப்பதற்கு மாறாக, கழகம் வலிவு பெறுவதற்குத் துணைபுரிந்துள்ளன என்பதையும் அவர் தெரிந்துகொண்டார்.

"கழகத்தை அழிக்கத் தாம் எடுத்துவந்திருக்கின்ற அனைத்து முயற்சிகளையும், கழகத்துக்கு வலிவூட்டத்தக்க துணைச் சாதனங்களாகத் தமது அறிவாற்றலால் கழகத் தலைமை ஆக்கிக் கொண்டு விட்டது" என்ற மகத்தான உண்மையையும் காமராசர் உணர்ந்து கொண்டார். இருந்தாலும், தமது அரசியல் செல்வாக்கை வெட்டி முறித்துவிட்ட கழகத்தின்மீது, தமக்கேற்பட்டிருக்கின்ற பொருளற்ற ஆத்திரத்தைக் காமராசர் அவர்களால் ஆற்றிக்கொள்ளவும் முடியவில்லை; மறந்துவிடவும் முடியவில்லை. விளைவாக, வழக்கம் போல் கழகத்தைக் காய்ந்துவருகின்றார் காமராசர் அவர்கள்!

சில நாட்களாக, ஜெயங்கொண்டம் பகுதியில் யாரோ ஒரு தேனீர்க் கடைக்காரர் அரிசன வகுப்பைச் சேர்ந்த குடிமகன் ஒருவனுக்குக் குடிக்க 'டீ' விற்க முடியாது எனக் கூறினான் என்ற கற்பனையைக் கூறி, கழகத்தைத் தூற்றிவந்தார் காமராசர்! அதற்குப் பின்னர் நச்சலூர் கிராமத்தில் அரிசன வகுப்பைச் சார்ந்த ஒருவர் தீயிடப்பட்டதாகக் கூறி, 'தீயிட்டவர்கள் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாவர்' என்ற பொய்ப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்துவந்தார் காமராசர் அவர்கள். இந்த நிகழ்ச்சி வழக்கு மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

நச்சலூர் கிராமக் காங்கிரசுக் கமிட்டித் தலைவராக இருந்து வருகின்ற என். பி. சண்முகம் அவர்கள், இந்த நிகழ்ச்சி பற்றிய விளக்கத்தைத் துண்டறிகை மூலம் மக்களுக்கு அறிவித்திருக்கின்றார். அதை, இங்கு அப்படியே தருகின்றோம் :—

"குளித்தலை வட்டம் நச்சலூரில் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏழுமலை என்பவர், சிலரால் தீயிடப்பட்டுக் கொடுமைப் படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் சம்பவத்திற்கும் — தி. மு. கழகத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது.

"இது சம்பந்தமாக வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறபடியால், இச்சம்பவம் குறித்து தி.மு.க.-வுடன் தொடர்புபடுத்தித் தவறாக தலைவர் காமராஜ் அவர்களிடத்தில் தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்கதாகும்.

"இச்சம்பவத்திற்கு அரசியல் காரணமோ, அரசியல் நோக்கமோ இருப்பதாக வதந்தியைப் பரப்புவது மிகவும் வருந்தத்தக்கதாகும்."

காங்கிரசுக் கமிட்டியின் தலைவர் தந்துள்ள விளக்கம், காமராசர் அவர்களுக்கு நல்லறிவைத் தரவேண்டும். இதுவரையில் உண்மை தெரியாமலோ அல்லது உண்மையைத் திரித்துக் கூறியோ கழகத்தைத் தூற்றி வந்துள்ளமைக்காகக் காமராசர் அவர்கள் வருத்தம் தெரிவிக்கவேண்டும். தம்மைப் போன்ற பெரிய தலைவர், வருத்தம் தெரிவிப்பது போன்ற எளிய காரியத்தை மேற்கொள்ளக்கூடாது எனக் காமராசர் அவர்கள் கருதுவதாக இருந்தால், இந்த நிகழ்ச்சி குறித்தும், இந்த நிகழ்ச்சியுடன் கழகத்தைத் தொடர்புபடுத்தி இதுவரை பேசிவந்ததையும், இனி பேசாமல் நிறுத்திக்கொள்ளவாவது வேண்டும். அரசியலில் நேர்மைக்கும் நாணயத்துக்கும் மதிப்பளிப்பவராக காமராசர் அவர்கள் இருக்கும் பட்சத்தில், இந்த நிகழ்ச்சிபற்றி இனி நாவசைக்காமல் இருந்திட வேண்டும். இருப்பாரா? அவர் வாய் மூடுவாரா?

—கா. க.

# தென்னகத்தின் குரலாகத் தி. மு. க.

## நான்கு மாநிலங்களிலும் வளர நல்வாய்ப்பு

### ஆந்திரத்தில் வேரூன்ற தக்க தருணம் வந்திருக்கிறது

"ஆந்திர மாநிலத்தில் தி. மு. கழக அமைப்பு முழு அளவில் செயல்படுவதற்குத் தக்க சூழ்நிலையும், வசதிகளும் தற்போது சாதகம் நிறைந்த முறையில் உள்ளன; இப்போது எடுத்துக்கொள்ளும் தீவிர முயற்சிகள் மூலம், 'அடுத்த பொதுத் தேர்தலின்போது ஆந்திர மாநிலத்தின் பல தொகுதிகளிலும் தி. மு. கழக வேட்பாளர்களை நிறுத்துவதற்கு நல்ல வாய்ப்புகள் உண்டாகும்' என்று தி. மு. கழகத் தலைவர்கள் கருதுகிறார்கள். இவையெல்லாம் ஆந்திரத்தில் தி. மு. கழகத்தின் மாநிலக் கிளை ஒன்று வெகு விரைவில் செயல்பட இருப்பதையே குறிக்கின்றன"

என்று, விஜயவாடாவிலிருந்து வெளிவரும் தெலுங்கு நாளிதழான 'ஆந்திரப் பிரபா' தெரிவித்துள்ளது அந்த இதழில், தி. மு. க. பற்றி வெளியான கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :—

"அண்மையில் தி. மு. கழகத் தலைவர்கள் ஆந்திர மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்தனர்; சென்ற வாரத்தில் ஐதராபாத்திலும், செக்கந்திராபாத்திலும் அவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசினர்; இங்கு முக்கியமானவர்கள் பலரைச் சந்தித்துப் பேசினர்; தி. மு. கழகத்தின் மாநிலக் கிளை ஒன்றினை ஆந்திரத்தில் துவக்கவேண்டியதன் அவசியம் பற்றி அவர்கள் எடுத்துக் கூறினர்.

ஆந்திர மாநிலத்தில் தி. மு. கழக மாநிலக் கிளை ஒன்று வெகு விரைவில் முழு நிலையில் செயல்படக் கூடியதொரு வாய்ப்புகள் நிரம்பியிருப்பதையே அவர்களது பேச்சுக்களும், அறிக்கைகளும் வெளியிடுகின்றன.

தி. மு. கழகத்திற்கு அளிக்கப்பட வேண்டிய உரிய அரசியல் தகுதி தேசிய மட்டத்தில் இன்னும் அளிக்கப்படாமலே இருக்கின்றது; அது 'தமிழ்நாட்டை மட்டுமே சார்ந்ததொரு கட்சி' என எண்ணப்படுகிறது.

நாடு முழுவதுக்குமானதோர் கருத்தின் அடிப்படையில் தி.மு. கழகம் செயல்பட வேண்டுமானால்—அது தொடங்கப்பட்ட தமிழ் நாட்டில் அதற்கு மேலும் வலிவும் பொலிவும் ஏற்பட வேண்டுமானால் — இவ்வாறு அதன் கிளைகளை மற்ற மாநிலங்களிலும் விரிவுப்படுத்த வேண்டியது அவசியம்தான்.

அனைத்திந்திய விவகாரங்களிலும் முனைவு காட்டி ஈடுபடவேண்டிய காலம் வந்துவிட்டது; அதற்குத் தேவையான பலத்தினை தி. மு. கழகம் பெறவேண்டியது மெத்த அவசியம்.

குறைந்த அளவுக்குத் தென் மாநிலங்கள் சம்பந்தப்பட்ட வரையிலாவது தி மு. கழகம் பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டிய ஒரு நிலையை விரைந்து உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கான ஆதரவினைத் தென்னகமெங்கும் திரட்டுவதற்குத் தி. மு. கழகம் விரைந்து முயற்சிகள் புரிய வேண்டும்.

'அப்படிப்பட்ட பலம்வாய்ந்த நிலை தி. மு. கழகத்திற்கு ஏற்பட வேண்டும்' என்று தி. மு. கழகத் தலைமை கருத்துக் கொண்டுள்ளது.

எனவே, கேரள மாநிலத்திலும், கருநாடக மாநிலத்திலும் தி. மு. கழகக் கிளைகளைப் பெரும் அளவில் நிறுவுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்; அவ்வாறே ஆந்திரத்திலும் கிளை நிறுவும் முயற்சியில் தி. மு. கழகத்தினர் முனைந்து செயல்படுகின்றனர்.

அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள வேலை எளிதானது அல்ல என்பதை அவர்கள் அறிவர்; அதனால் அவர்களது முயற்சியும் தீவிரம் நிறைந்த முயற்சியாகும்.

"......இந்நிலையில், தென்னக மாநிலங்கள் அனைத்துக்கும் பொதுவான பிரச்சினைகள் பற்றி மற்ற மாநில மக்களிடையே எடுத்துக் கூறி -- அவர்களது ஆதரவைத் தி. மு. கழகத்தின் சார்பில் திரட்டி -- அதன்மூலம் தென்னகத்தில் தி. மு. கழகத்திற்குப் பலம்வாய்ந்ததோர் தன்மையினை உருவாக்கவேண்டும்; அந்தப் பலத்தால் தி. மு. கழகம் தன் இலட்சியத்தை அடைய முடியும்" என்று எண்ணப்படுகிறது.

தென்னக மாநிலங்களுக்குப் பொதுவான பிரச்சினைகள் பல உள்ளன; இந்தப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு ஈடுபாடு காட்டுகின்றார்களோ அவ்வளவு ஈடுபாட்டினை தென்னகத்திலுள்ள மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் காட்டவேண்டிய அவசியமும் உள்ளது; குறிப்பாக மொழிச் சிக்கல் இப்படிப்பட்ட பொதுவான அம்சங்களில் மூதன்மை வகிக்கின்றது.

மத்திய அரசும், காங்கிரசுத் தலைமையும் தென்னகத்து மக்கள் மீது—அவர்களது தாய்மொழியல்லாத வடக்கத்திய மொழியான இந்தியினைத் திணிப்பதற்கு அவர்களால் இயன்ற எல்லாவிதமான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

தென்னகத்திலுள்ள அனைத்து மக்களும இந்தித் திணிப்பினை எதிர்த்துச் செயல்படுகின்றனர். அவர்கள், தங்கள் தாய்மொழியினைக் காப்பதில் முழு மூச்சான உறுதியோடு நிற்கின்றனர்.

இந்தப் பிரச்சினை, தென்னக மக்கள் அனைவரையும ஒருசேர ஒத்து நிற்கவேண்டியதன் அவசியத்தை உண்டாக்கியுள்ளது. இந்த நிலையினை அறிவாய்வு மூலம் மேலும் பலப்படுத்தினால் தென்னகத்தின அனைத்து மக்களையும், ஒரு கருத்தில்—ஒத்த நிலையில்—வரிசையில் நிற்கச் செய்வது எளிது.

இதே போன்று மத்திய அரசு தனது நிதிக் கொள்கை மூலமாகவும், தொழில் துறை அமைப்புக்கள் தொடர்பாகவும் தென்னக மாநிலங்கள்மீது காட்டும் பாகுபாட்டு உணர்வையும், நியாய விரோதச் செயல்களையும் தடுக்கவேண்டியதும் அவசியமாகிறது.

தென்னக மக்கள் அனைவரும் கூட்டுச் சேர்ந்து செயல்படவேண்டிய அடுத்தபடியான பிரச்சினையாகும் இது!

காங்கிரசில் உள்ள பெருந்தலைவர்கள், வடக்கத்தி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்; அந்தத் தலைமையின் கருத்தும், அவர்கள் எடுத்துக்கொள்ளும் முடிவுகளும் தென்னக மாநிலங்களில் உள்ள காங்கிரசு அமைச்சர்கள் மேற்கூறியவாறு செயல்படும் காங்கிரசுப் பெரும தலைமைக்கு எதிராக --- தங்கள் மாநிலங்களின் நன்மைக்காக எதையும் செய்ய முடிவதில்லை; காரணம, அவர்கள் காங்கிரசுக்காரர்கள்; கட்சிக் கட்டுப்பாடு அவர்களைக் கட்டிப் போட்டுவிடுகின்றது.

இந்தப் பிரச்சினைகளை முன் வைத்து, 'வட்டாரங்களின் உரிமைகள் மத்திய ஆட்சியினாலும், தலைமையினராலும், பறிக்கப்படாமல் காப்போம்' என்று முன்வந்து செயல்படுகின்ற அமைப்பு தென்னகத்திலுள்ள தி. மு. கழகமே ஆகும்.

எனவே, தி. மு. கழகத்தின் மாநிலக் கிளைகள் ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய மற்ற மாநிலங்களிலும் பெரும் அளவிலும், பரந்த அளவிலும், செயல்படவேண்டியதன் அவசியத்தை அதன் தலைவர்கள் உணருகின்றனர்; அவர்களது முயற்சி பெரும் பயன் அளிக்கும் என்பது உறுதி.

"அடுத்த பொதுத் தேர்தலில் ஆந்திர மாநிலத்தில் எல்லாத் தொகுதியிலும் தி. மு. கழக வேட்பாளர்களை நிறுத்துவோம்" என்று தி. மு கழகத்தினர் கூறுவது, இந்த அடிப்படையில் அமைந்ததே ஆகும்."

# வெள்ளத்தினால் ஏற்பட்ட பெரு நட்டம்!

## மக்களவையில் தகவல்

புதுடில்லி, சூலை 29—

"நாட்டின் பல பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 75,13,000 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுவிட்டன; இதில் சுமார் 2,50,000 ஏக்கர், பயிர் விளைந்த நிலங்களாகும்.

"வெள்ளத்தின் காரணமாக ரூ. 11 கோடி மதிப்புள்ள பயிர்கள் சேதமடைந்தன.

"வெள்ளத்தினால் ஏற்பட்ட பொருட்சேதம் ரூ. 11 கோடியாகும்.

"வெள்ளத்தினால் மொத்தம் 1,129 பேர் மடிந்தனர்"

என்ற தகவல்களை, மக்களவையில் பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் தெரிவித்தார்.

# பாகிஸ்தானுக்கு இரஷ்ய ஆயுதம்

## 'இந்தியா எதிர்க்கத் தேவை இல்லை' என்கிறார் முதிய காங்கிரசுக்காரர்!

கான்பூர் சூலை 30—

'பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுத உதவி செய்வது குறித்து நாம் ஆத்திரப்படுவது அவசியமில்லாததாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# கல்லூரிகளில்சேர இன்னமும் வாய்ப்பு

## அரசினர்-தனியார் கல்லூரியில் காலியாக உள்ள இடங்கள்

### கல்வித் துறை இயக்குநர் வெளியிடும் விவரம்

சென்னை, ஜூலை 30—
தமிழ்நாட்டில் அரசினா கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் இடங்கள் காலியாக இருப்பது குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநர் சையத்யாகூப் தகவல் தெரிவித்துள்ளார்.

**(1) கணிதம்**

**(2) இயற்கை விஞ்ஞானம்**

**(3) சரித்திரம் -- பொருளாதாரம்**

ஆகியவை போன்ற பாடங்கள் ஆகியவற்றில், ஜூலை 25-ல் காலியாக இருந்த இடங்களின் எண்ணிக்கையை அவர் தெரிவித்திருக்கிறார்.

மாயூரம் — அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் காலியாக உள்ள இடங்கள் முறையே (1) 13; (2) காலி இல்லை; (3) 7.

தஞ்சை—சரபோஜி கல்லூரியில் காலியாக உள்ள இங்கள் முறையே (1) 16; (2) காலி இல்லை; (3) 11.

வாலாசாபேட்டை — அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் காலியாக உள்ள இடங்கள் முறையே (1) காலி இல்லை; (2) காலி இல்லை; (3) 48.

புதுக்கோட்டை—இராசா கல்லூரியில் காலியாக உள்ள இடங்கள் முறையே (1) 26; (2) 25; (3) 1.

கரூர்—அரசினர் கலைக் கல்லூரியில் காலியாக உள்ள இங்கள் முறையே (1) 28; (2) 15; (3) 10.

பொன்னேரி—லோகநாத நாராயணசாமி கல்லூரியில் காலியாக உள்ள இடங்கள் முறையே (1) 57; (2) 47; (3) 37.

திருச்சி—பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரியில் காலியாக உள்ள இடங்கள் முறையே (1) 9; (2) 1; (3) 66.

கணிதப் பிரிவில் சுமார் 700 இடங்களும், இயற்கை விஞ்ஞானப் பிரிவில் 500 இடங்களும், சரித்திரம் போன்ற பாடப் பிரிவில் 600 இடங்களும் கீழ்க்கண்ட தனியார் கல்லூரிகளில் இருப்பதாக இயக்குநர் கூறுகிறார் :—

கோவை—அவிநாசிலிங்கம் குடும்ப கலைக் கல்லூரி.

காஞ்சிபுரம் — பச்சையப்பா பெண்கள் கல்லூரி.

திருச்சி—தேசியக் கல்லூரி.

உதகை—பிராவிடன்ஸ் பெண்கள் கல்லூரி.

பழனி—பழனியாண்டவர் கல்லூரி.

கடலூர்—கந்தசாமி நாயுடு பெண்கள் கல்லூரி.

திருச்சி—ஹோலிகிராஸ் கல்லூரி.

திருப்பத்தூர் — ஆறுமுகம் பிள்ளை--சீதம்மாள் கல்லூரி.

தூத்துக்குடி—செயிண்ட்மேரி கல்லூரி.

குற்றாலம்—பராசக்தி பெண்கள் கல்லூரி.

அகத்தீசுவரம் —விவேகானந்தா கல்லூரி.

சிவகாசி—அய்யா நாடார்--சானகி அம்மாள் கல்லூரி.

திருவைகுண்டம்—கே ஜி. எஸ். கலைக் கல்லூரி.

மதுரை—தியாகராசர் கல்லூரி.

நாசரத்—மார்கோஸ்சிஸ் கல்லூரி.

## உலகிலேயே பெரிய பண்ணை மூடப்பட்டது !

கொச்சி, ஜூலை 30.—
ரூ. 15 இலட்சத்தை விழுங்கிய கேரள அரசுப் பண்ணை மூடப்பட்டுவிட்டது!

1,500 ஏக்கர் பரப்பளவு கொண்ட இப்பண்ணை, 'உலகிலேயே பெரிய பண்ணை' எனக் கருதப்படுவதாகும்.

# ஆயிரம் மார்க் திட்டம்

## பெரியநாயக்கன்பாளையத்தில் அமைச்சர் துவக்கிவைத்தார்

### மற்றப் பள்ளிகளும் பின்பற்ற நெடுஞ்செழியன் வேண்டுகோள்

கோவை, ஜூலை 30—
மாணவர்களின் திறனை மதிப்பிடும் '1000 மார்க் திட்டம்' என்ற புதிய திட்டத்தை, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இங்கு துவக்கிவைத்தார்.

பாடங்களில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் மாணவர்களின் சாதனையை மதிப்பிடப் புதிய திட்டம் வகைசெய்கிறது.

புதிய திட்டத்தைச் செயல்படுத்தியதற்காகப் பெரியநாயக்கன் பாளையத்தில் உள்ள பயனீர் ஆலை உயர்நிலைப் பள்ளி நிர்வாகத்தினரை அமைச்சர் பாராட்டினர்; மற்ற பள்ளிகளும் இதனைப் பின்பற்றும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தற்போது செகண்டரி பள்ளிகள் அனைத்திலும் 600 மார்க் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்துடன் பண்பாடு — நடத்தை — கையெழுத்து —கிளப் நடவடிக்கைகள்—விளையாட்டுகள்— நூல் நிலையத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றுக்காக 400 மார்க்குகள் ஒதுக்கப்படும்.

'1000 மார்க் திட்ட'த்தின்கீழ் கல்வி பற்றிய தமது கனவுகள் உருப்பெற்றுள்ளது குறித்து மகிழ்ச்சியடைவதாக அமைச்சர் கூறினர்.

'கையெழுத்துச் சம்பந்தமாக போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று கருதுபவர்களில் நானும் ஒருவன்' என்றார்; 'இத்திட்டம் வெற்றி பெறும்' என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## எஸ். எஸ். எல். சி.-யில் தவறியவர்கட்கு வசதி

### 1970 வரை பழைய திட்டப்படி தேர்வு எழுதலாம்

திருச்சி, ஜூலை 30—
இவ்வாண்டு மார்ச் திங்களில் நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. தேர்வில் தவறிய மாணவர்கள், 1970 அக்டோபர்வரை பழைய திட்டத்தின்கீழ் அத்தேர்வுகளை எழுதலாம்.

இவ்வாண்டு முதல் 11-வது வகுப்பில் விருப்பப் பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது; ஆகவே இவ்வாண்டு 11-வது வகுப்பு மாணவர்கள், 1969 மார்ச் சில நடைபெறும் தேர்வில், விருப்பப் பாடத் தேர்வுகளையும் எழுதுவார்கள்; ஆகவே, இவ்வாண்டு மார்ச்சில் நடந்த எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேருத மாணவர்களுக்கு 1970 அக்டோபர்வரை பழைய பாடத் திட்டத்தின்கீழ் தேர்வு நடத்தப்படும்; ஆகவே அதுவரையில், பழைய திட்டத்தின்கீழ் நடத்தப்படும் தேர்வுகளுக்கு எழுதலாம்.

ஆகவே, இவ்வாண்டு தவறிய மாணவர்களை 11-வது வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டாம் என்று பள்ளிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேரளத்துக்கு வந்தது மைசூருக்கு!

திருவனந்தபுரம், ஜூலை 29—
கேரளத்துக்கு அனுப்பப்பட்ட 40,000 டாலர் பெறுமானமுள்ள குடும்ப—குழந்தைகள் நலத் திட்டத் துணைச் சாதனங்கள், இப்போது மைசூருக்குத் திருப்பிவிடப்பட்டுவிட்டனவாம்.

இச்சாதனங்களை 'யுனிசெப்' அனுப்பிவைத்தது; இதனை மேற்கொள்வது பற்றிக் கேரள அரசு முடிவு எதனையும் மேற்கொள்ளாததாலேயே அவைகள், மைசூருக்குத் திருப்பிவிடப்பட்டனவாம்.

# பிச்சைக்காரர்கள் பிரச்சினை

## தேசீய மட்டத்தில் ஆய்வு செய்யப்படுமாம்

### செப்டம்பரில் மாநில அமைச்சர்கள் கூடிப் பேசுவர்

புதுடில்லி, ஜூலை 30—
மாநில சமூக நலம், தாழ்த்தப்பட்டோர் நலம் ஆகிய துறைகளைச் சேர்ந்த அமைச்சர்களின் மாநாடு ஒன்று செப்டம்பர் இறுதியில் இங்கு நடைபெறவிருக்கின்றது.

இந்த மாநாட்டில், பிச்சைக்காரர்களின் பிரச்சினைபற்றியும், மற்றும் சில பிரச்சினைகள்பற்றியும் ஆய்வு நடத்தப்படும்.

இத்தகவலை நாடாளுமத்தில் மத்திய சமூக நலத் துணையமைச்சர் திருமதி புல்ரேணு குகா தெரிவித்தார்.

பிச்சை வாங்குவதை ஒழிப்பது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது எழுப்பப்பட்ட வினுவுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது சம்பந்தமாக மாநிலங்களின் யோசனைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர். மேலும் அவர் தெரிவித்ததாவது :—

"பிச்சைக்காரர்கள் பிரச்சினையைத் தேசிய மட்டத்தில் ஆய்வு செய்து தீர்வு காண்பதற்குச் சாத்தியமான யோசனைகளை இந்த மாநாட்டில் கலந்துகொள்வோர் தெரிவிப்பார்கள்.

"இந்தப் பிரச்சினையின் அடிப்படைத் தன்மைபற்றி மத்திய அரசு முழுவதும் உணர்ந்துள்ளது. இது குறித்து எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், பிச்சைக்காரர்களில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான வழிவகை பற்றியும் அரசு ஆராய்கின்றது. இது சம்பந்தமாகவும் மாநாட்டில் விவாதிக்கப்படும்."

## இந்துமாக் கடலில் அமைதிக் குலைவு முயற்சி?

### நாடாளுமன்றத்தில் கவனஈர்ப்புத் தீர்மானம்

"அமைதி நிலவும் ஒரு பகுதியாகவே இந்துமாக் கடல் இருக்க வேண்டுமென அரசு விரும்புகிறது; இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு—வருகின்றன"

என்று தற்காப்புத் துறை அமைச்சர் சுவரண் சிங், நாடாளுமன்ற மேலவையில், அண்மையில் சில சோவியத் இரஷ்யக் கப்பல்கள் இந்துமாக் கடலுக்கு வந்ததைப் பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## மணலியில் உருவாகும் எண்ணெய் தூய்மை ஆலை

### ஐந்து மைல் தொலைவுக்கு உருக்குக் குழாய் அமைப்பு

சென்னை, ஜூலை 29—
சென்னைக்கு அருகிலுள்ள மணலியில் ரூ. 45 கோடி செலவில் அமைக்கப்படும் எண்ணெய் தூய்மை ஆலை, அடுத்த ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து இயங்கத் துவங்கும்,

4,000 பேர் பணியாற்றும் இந்தத் தொழிற்சாலையின் முக்கால் பகுதி வேலைகள் நிறைவு பெற்றுவிட்டன.

சென்னைத் துறைமுகத்திலிருந்து தொழிற்சாலை வரையில்—ஐந்து மைல தொலைவுக்கு—30 அங்குல உருக்குக் குழாய் அமைக்கப்படுகிறது; இந்தக் குழாய்மூலம் துறைமுகத்திலிருந்து எண்ணெய்த் தூய்மை ஆலைக்குத் தேவைப்படும் மூலப்பொருளான 'குரூட் எண்ணை' யைக்கொண்டு செல்லப்படும்.

# தஞ்சை விவசாயிகளிடை அமைச்சர் மு. கருணாநிதி

## வயல்--வரப்புகளிலெல்லாம் சென்று நிலைமை அறிந்தார்

### தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க உடனடி நடவடிக்கை

திருவாரூர், ஜூலை 30—
காவிரிப் பாசன—கடைமடைப் பகுதிகளில் போதுமான தண்ணீர் கிடைக்காததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் புகார் தெரிவித்தனர்; இதன்பேரில் விவசாயிகளை நேரில் சந்தித்து அவர்களுடைய குறைகளைப் போக்க பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்; ஏறத்தாழ 20 கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்தார்.

தலைமைப் பொறியரும் நீர்ப்பாசன அதிகாரிகளும் உடன் சென்றனர்.

நேற்று அதிகாலை 4-45 மணிக்கு கருணாநிதி திருவாரூருக்குப் போய்ச் சேர்ந்தார்.

காலை 8-மணிக்கு திருவாரூரிலிருந்து புறப்பட்டு ஆலத்தம்பாடி, தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி, வலிவலம், கீவளூர், நன்னிலம், சன்னாநல்லூர், திட்டச்சேரி, திருமருகல் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

முள்ளியாறு, வெண்ணாறு, ஓடம்போக்கி ஆறு, பாண்டவை ஆறு, வெட்டாறு, முடிகொண்டான் ஆறு முதலிய ஆறுகளின் கடைமடைப் பகுதிகளைப் பார்வையிட்டார்.

நீர்முளை, ஆலங்குடி ஆகிய இடங்களில் 'ஆடுதுறை—27' நெல் பயிரிடப்பட்டுள்ள வயல் வரப்புகளில் அமைச்சர் நடந்து சென்றார்.

ஏறத்தாழ 2 பர்லாங்கு தூரம் நடந்து பயிர் நாற்றுகளைப் பறித்து, அவற்றின் வளர்ச்சிகளைக் கவனித்தார்.

கடைமடையில் தண்ணீர் பாயும் மேல்பகுதி மிராசுதார்கள்--விவசாயிகள் ஆகியோருக்கும், தண்ணீர் பாயாத கீழ்ப்பகுதி மிராசுதார்கள்--விவசாயிகள் ஆகியோருக்கும் தகராறு இருந்துவந்தது; இருதரப்பினரையும் அழைத்து, அவர்களுடைய தகராறைத் தீர்த்து வைத்தார்.

அமைச்சரிடம் பல இடங்களில் கோரிக்கை மனுக்கள் கொடுக்கப்பட்டன; 'சில கிராமங்களில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது; ஆனல் சில கிராமங்களில் தண்ணீர் கிடைப்பது இல்லை; ஆற்றில் அதிக தண்ணீர் விடப்பட்டால், இந்தக் குறை நீங்கிவிடும்' என்று விவசாயிகள் கூறினர்.

அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்த அமைச்சர் அவற்றை உடனடியாகப் போக்கும்படி தம்முடன் வந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

"எங்கள் கிராமப் பகுதிகளில் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கிறது" என்று சில விவசாயிகள் அமைச்சரிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

# 50,000 பேர் படுகொலை!

ஆங்காங், ஜூலை 29—
வட வியட்நாமை ஒட்டியுள்ள குவாங்சி மாநிலம் முழுவதிலும் கடந்த 6 திங்களாக உள்நாட்டு போர் நடைபெற்றுக்கொண்டு வருவதாகவும், இதில் 50,000 பேர்களாவது படுகொலை செய்யப்பட்டிருப்பர் என்றும் சிவப்புக் காவலரின் வெளியீடு ஒன்றிலிருந்து தெரியவருகிறது.

மா சே-துங்கின் ஆதரவாளர்களுக்கும்—எதிர்ப்பாளருக்குமிடையில் 56 நகரங்களில் போராட்டம் நடைபெற்றிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

இரு தரப்பினரும் நவீன ரக ஆயுதங்களைப் பயன்படுத்தியதாகவும் அந்த வெளியீட்டில் கூறப்பட்டிருக்கிறது.

## மா சே-துங் சீடர்களுக்கு நேர்ந்த கதி

### கலாச்சாரப் புரட்சி வீரர்கள் தற்கொலை செய்து கொள்ளுகின்றனர்

ஹாங்காங், ஜூலை 29—
மா-சே துங்கின் சிந்தனைகளைப் பின்பற்றி கலாச்சாரப் புரட்சியில் இறங்கிய பெரும்பாலான சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள், கலாச்சாரப் புரட்சி நிறுத்தப்பட்டதை யடுத்துத் தற்கொலை செய்துகொள்கின்றனராம்!

"கலாச்சாரப் புரட்சியின்போது செய்த கொடூரங்களுக்காகத் தண்டனை விதிக்கப்படுமோ" என்று அஞ்சி நடுங்கிக்கொண்டு அவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்களாம்!

பொதுமக்கள் முன்னிலையில் அவமானப்படுத்தப்படுவது — சிறை முகாம்களில் தள்ளப்படுவது போன்ற தண்டனைகளுக்கு அஞ்சி ஏராளமான கம்யூனிஸ்டுகள், முன்னள் நிலப் பிரபுக்கள், மணக்கார விவசாயிகள், தற்கொலை செய்துகொண்டனராம!

## தொத்துநோய்சிகிச்சை

### குழந்தைகட்குத் தனி விடுதி

சென்னை, ஜூலை 30—
சென்னை தண்டையார்பேட்டையிலுள்ள தொத்து நோய் மருத்துவமனையில், பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் ஒன்றாகச் சிகிச்சை அளிக்கப்படுகிறது; இதில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக, குழந்தைகளுக்கெனத் தனி மருத்துவமனை கட்டப்படுகிறது. தொத்துநோய் மருத்துவமனை நிலையத்திற்குள்ளேயே கட்டப்படுகிறது; இதற்காக ரூ.2½ இலட்சம் செலவிடப்படுகிறது; இந்தப் பணத்தை தமிழக அரசு கடனாகக் கொடுத்திருக்கிறது. இந்த மருத்துவமனையில் மொத்தம் 50 படுக்கைகள் இருக்கும்.

மருத்துவமனையில் நவீன சிகிச்சைக் கருவிகள் வாங்குவதற்காக ஐ. நா.-வில் உள்ள உலக சுகாதார நிலையம் ரூ. 25,000 கொடுத்துள்ளது.

## இரயில்வே நிர்வாகத்தில் தொழிலாளருக்கும் பங்கு

### பிரச்சினை பரிசிலனையில் உள்ளதாம்

புதுடில்லி, ஜூலை 30—
"இந்திய இரயில்வே நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு தரும் பிரச்சினை, அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது"

என்று இரயில்வேத் துறை அமைச்சர் பூனச்சா, நாடாளுமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## கழகத் தேர்தல்

# 4--8--68 ஞாயிறு நடைபெறும் தேர்தல்கள்

## காலை 10-மணி

| மாவட்டம் | வட்டம்—பெருநகரம் | தேர்தல் நடைபெறும் இடம் | ஆணையாளர் |
|---|---|---|---|
| செங்கற்பட்டு | காஞ்சி | சண்முகம் நினைவு மன்றம், காஞ்சி | வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ. |
| | பொன்னேரி | பயணியர் விடுதி, பொன்னேரி | பொ. கு. ராமதாஸ் எம்.சி. |
| | திருவள்ளூர் | " " திருப்பாச்சூர் | என். ஏ. பழனி எம்.சி. |
| | திருத்தணி | " " திருத்தணி | எஸ். கன்னியப்பன் எம்.சி. |
| | திருப்பெரும்புதூர் | " " பூவிருந்தவல்லி | ஜேசுதாஸ் எம்.சி. |
| | செங்கல்பட்டு | " " செங்கல்பட்டு | வேலூர்நாராயணன் எம்.ஏ.பி.எல். |
| | மதுராந்தகம் | கழகக் கட்டடம், மதுராந்தகம் | சு. பாலன் எம்.சி. |
| வட ஆற்காடு | வேலூர் (பெருநகரம்) | டவுன் ஹால், வேலூர் | லோகநாதன் எம்.சி. |
| | ஆரணி | பயணியர் விடுதி, ஆரணி | கோ. இளவரசு எம்.சி. |
| | அரக்கோணம் | " " அரக்கோணம் | சிட்டிபாபு எம்.பி. |
| | திருவண்ணாமலை | " " திருவண்ணாமலை | இர. சடகோபன் எம்.சி. |
| | குடியேற்றம் | நகரக் கழக அலுவலகம், குடியேற்றம் | கமலநாதன் எம்.பி. |
| | செய்யாறு | பயணியர் விடுதி, செய்யாறு | அ. கபாலமூர்த்தி எம்.சி. |
| | வந்தவாசி | " " வந்தவாசி | கரிகாலன் எம்.சி. |
| தெ. ஆற்காடு | திண்டிவனம் | பயணியர் விடுதி, திண்டிவனம் | சைதை சம்பந்தம் எம்.சி. |
| | சிதம்பரம் | " சிதம்பரம் | ஆர். டி. பாஸ்கரன் எம்.சி. |
| | கடலூர் | வர்த்தகர் சங்கம், கடலூர் (என்.டி.) | கோவை செழியன் பி.ஏ. |
| | கள்ளக்குறிச்சி | பயணியர் விடுதி, கள்ளக்குறிச்சி | என். எஸ். தேவராசன் |
| புதுவை | புதுவை | அனந்தம்மாள் சத்திரம், வில்லியனூர், புதுவை | க. பார்த்தசாரதி எம்.சி. |
| திருச்சி | அரியலூர் | பயணியர் விடுதி, அரியலூர் | டி. என். கிருஷ்ணன் எம்.சி. |
| | பெரம்பலூர் | இலட்சுமி தியேட்டர், பெரம்பலூர் | மு. மாசிலாமணி |
| | குளித்தலை | பயணியர் விடுதி, குளித்தலை | கே. எம். கண்ணபிரான் |
| | கரூர் | " கரூர் | புருடோத்தமன் எம்.சி. |
| | திருச்சி பெருநகரம் | தமிழ்ச் சங்கக் கட்டிடம், திருச்சி | என். கிட்டப்பா எம்.எல்.ஏ. |
| | குளத்தூர் | பயணியர் விடுதி, குளத்தூர் | எம். கன்னியப்பன் எம்.சி. |
| | ஆலங்குடி | தி.மு.க. அலுவலகம், ஆலங்குடி | எம். கன்னியப்பன் எம்.சி. |
| தருமபுரி | கிருஷ்ணகிரி | கே. ஆர். பி. பயணியர் விடுதி | ந. செயராமன் |
| | அரூர் | சித்ரா டாக்கீஸ் | ஆ. மு. நாராயணன் |
| முகவை | பரமக்குடி | பயணியர் விடுதி, பரமக்குடி | எஸ். வி. வேலு |
| | திருப்பத்தூர் | " திருப்பத்தூர் | தமிழ்மணி எம்.சி. |
| | திருவில்லிபுத்தூர் | " திருவில்லிபுத்தூர் | சுப்பிரமணி எம்.சி. |
| | திருவாடானை | " திருவாடானை | தி. சு. நல்லதம்பி எம்.சி. |
| | அருப்புக்கோட்டை | " அருப்புக்கோட்டை | கோமகன் |
| நெல்லை | நெல்லை பெருநகரம் | குறுக்குத்துறை திருமணமண்டபம் | இரா. சம்பந்தம் எம்.சி. |
| | தூத்துக்குடி பெருநகரம் | வடக்கூர் தி. மு. க. உடற்பயிற்சிக் கழகம் | காட்டூர் கோபால் |
| | கோவில்பட்டி | டூரிங் சினிமா, விளாத்திக்குளம் | காஞ்சி மணிமொழியார் |
| | நாங்குநேரி | பயணியர் விடுதி, வள்ளியூர் | குமார் |
| | அம்பா சமுத்திரம் | " அம்பாசமுத்திரம் | மா. தங்கவேலர் |
| தஞ்சை | தஞ்சை பெருநகரம் | இராமநாதன்செட்டியார் மண்டபம் | அன்பில் தருமலிங்கம் |
| | குடந்தை பெருநகரம் | கழகக் கட்டிடம், குடந்தை | அ. பொ. அரசு எம்.எல்.ஏ. |
| | பாபநாசம் | பயணியர் விடுதி, பாபநாசம் | ந. கணபதி பி.எஸ்சி.,பி.எல். |
| | பட்டுக்கோட்டை | " பட்டுக்கோட்டை | ஏ. எஸ். இராமன் எம்.சி. |
| | சீர்காழி | " சீர்காழி | எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி. |
| | நாகை | பாண்டியன் தியேட்டர் | சா. கணேசன் எம்.சி. |
| | மன்னார்குடி | ப. நா. இல்லம், மன்னை | ஜி. நீலமேகம் பி.எஸ்சி.,பி.எல். |
| சேலம் | திருச்செங்கோடு | வட்டக் கழக அலுவலகம், திருச்செங்கோடு | ப. க. வேணுகோபால் |
| | மேட்டூர் | பாப்பம்மாள் திருமண மண்டபம், மேட்டூர் | ஓ. எஸ். பாலசுந்தரம் |
| | ஓமலூர் | பயணியர் விடுதி, ஓமலூர் | கந்தசாமி எம்.எல்.ஏ. |
| | இராசிபுரம் | ஏசுநாதர் ஆலய மண்டபம், இராசிபுரம் | கே. காமாட்சி |
| கோவை | கோவை நகரம் | கழகக் கட்டிடம், கோவை | கோ. செங்குட்டுவன் |
| | கோவை | நகராட்சிப் பயணியர் விடுதி, கோவை | நீல. நாராயணன் |
| | சிங்காநல்லூர் பெருநகரம் | வாவியர் திருமண மண்டபம், சிங்காநல்லூர் | முத்துராமலிங்கம் |
| | திருப்பூர் பெருநகரம் | பயணியர் விடுதி, திருப்பூர் | டி. கே. கபாலி எம்.சி. |
| | ஈரோடு பெருநகரம் | நகராட்சிப் பயணியர் விடுதி, ஈரோடு | வை. ரத்தினவேலு பி.ஏ. |
| | ஈரோடு | இந்திரா தியேட்டர், பெருந்துறை | ஏ. செல்வராசு எம்.சி. |
| | பொள்ளாச்சி | வெங்கடேசுவரா காலனி, எம்.எல்.ஏ. விடுதி, பொள்ளாச்சி | மு. வரதராசன் |
| மதுரை | மதுரை பெருநகரம் | திருமண மண்டபம், ஆழ்வார்புரம், மதுரை | மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி. |
| | மேலூர் | பயணியர் விடுதி, மேலூர் | து. வேணுகோபால் எம்.சி. |
| | திண்டுக்கல் பெருநகரம் | " திண்டுக்கல் | அன்புக்கரசன் எம்.சி. |
| | பழனி | " பழனி | லட்சுமிபதி எம்.சி. |
| | பெரியகுளம் | " பெரியகுளம் | கே. பாஸ்கரன் எம்.சி. |
| | உத்தமபாளையம் | " உத்தமபாளையம் | குளித்தலை முத்துகிருஷ்ணன் |
| நீலகிரி | கூடலூர் | பயணியர் விடுதி, கூடலூர் | சிவகுமார் |
| | உதகை | " உதகை | " |
| குமரி | நாகர்கோவில் பெருநகரம் | " வடசேரி | கே. கோவிந்தசாமி எம்.சி. |
| | விளவங்கோடு | " குளித்துறை | பி. கே. துரைக்கண்ணன் |
| | தோவாளை | " பூதபாண்டி | டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம்.எல்.சி. |

குறிப்பு :-- 'பெருநகரம்' என்று குறிப்பிடப்பட்டவை தவிர மற்றவை 'வட்டங்கள்' ஆகும்.

# தி. மு. க. வட்டக் கழகத் தேர்தல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

5. வட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்குத் தலைமைக் கழகத்திலிருந்தே நேரடியாக அவரவர் முகவரிக்கு அடையாளச் சீட்டுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தச் சீட்டுப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேர்தல் நடைபெறும் இடத்தில் இருக்கவும், தேர்தலில் கலந்துகொள்ளவும் உரிமை படைத்தவராவர். எந்தக் காரணத்தினாலாவது அடையாளச் சீட்டு கொண்டுவரத் தவறிய பிரதிநிதிகள், தக்க ஆதாரத்துடனும் கூடியுள்ள பிரதிநிதிகளில் இரண்டு பேரிடம் எழுத்து மூலமான உறுதிமொழி பெற்றும் அவர்களைத் தேர்தல் கூட்டத்தில் ஆணையாளர் அனுமதிப்பார்.

6. பிரதிநிதிகளின் அடையாளச் சீட்டுப் பரிசீலனை, வருகை தந்த பிரதிநிதிகளின் கையொப்பம் பெறுவது ஆகியவை முடிந்த பிறகு ஆணையாளர், தேர்தலைத் துவக்குவதாக அறிவிப்பார். தேர்தலைத் துவக்குவதாக ஆணையாளர் அறிவித்து -- வாக்குப் பதிவு துவக்கிய பிறகு வருகைதரும் பிரதிநிதிகளை, அடுத்த பொறுப்புக்கான தேர்தல்வரை எக்காரணம் கொண்டும் ஆணையாளர் அனுமதிக்கமாட்டார்.

7. தேர்தலைத் துவக்குவதாக ஆணையாளர் அறிவித்ததற்குப் பின், வட்டக் கழக அவைத் தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், மாவட்டக் கழகத்திற்குப் பத்துப் பிரதிநிதிகள் (வட்டக் கழகச் செயலாளர், 'செயலாளர்' என்ற தகுதியாலேயே மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் தகுதி பெறுகிறார்) ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள், ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும். மாவட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பத்துப் பிரதிநிதிகளில், அந்தந்த வட்டத்தில் எத்தனை முனிசிபல் நகரங்கள் இருக்கின்றனவோ அத்தனைப் பிரதிநிதிகள் போக மீதியுள்ள எண்ணிக்கை கொண்ட உறுப்பினர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். (உதாரணமாக — சைதாப்பேட்டை வட்டத்தில் திருவொற்றியூர், ஆலந்தூர், தாம்பரம் ஆகிய மூன்று முனிசிபல் நகரங்கள் உள்ளன ; அந்த வட்டத்தில் மூன்று பிரதிநிதிகள் போக மீதி ஏழுபேரை மட்டுமே மாவட்டக் கழக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் நடைபெற வேண்டும். முனிசிபல் நகர்களே இல்லாத வட்டத்தில் முழுமையாக பத்துப்பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்). ஒரு பொறுப்புக்கான தேர்தல் முடிந்து முறைப்படி முடிவு அறிவித்த பின்பே அடுத்த பொறுப்புக்கான தேர்தலை ஆணையாளர் துவக்குவார்.

8. அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்கான விண்ணப்பங்களை எக்காரணம் கொண்டும் தேர்தல் நாளில் ஆணையாளர் ஏற்றுக்கொள்ளமாட்டார். தலைமைக் கழகத்திற்கு முன்கூட்டி அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையிலேயே அந்தத் தேர்தல்கள் நடைபெறும்.

9. 8-வது பாராவில் குறிப்பிட்டுள்ள தேர்தல்கள் முறைப்படி முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், பதினேறு செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலை ஆணையாளர் அறிவித்துத் துவங்குவார்.

10. வட்டச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு மட்டும் ஆணையாளர், தலைமைக் கழகம் தம்மிடம் கொடுத்துள்ள பட்டியலில் குறிபபிட்டுள்ள வேட்பாளர்களோடு, போட்டியிட விரும்பி மேலும் அந்த இடத்திலேயே முறைப்படி நிறைவு செய்து தரப்படும் விண்ணப்பத் தாள்களையும் உரிய கட்டணத்தோடு ஏற்றுக்கொள்வார். தலைமைக் கழகத்தில் ஏற்கனவே விண்ணப்பம் கொடுத்துள்ள தோழர்களும், அங்கு விண்ணப்பம் கொடுக்கும் தோழர்களும் போட்டியிடுவதாக வேட்பாளர் அறிவித்து, செயற்குழு உறுப்பினர் தேர்தலைத் துவக்கி நடத்துவார்.

11. தேர்தலில் இரு வேட்பாளர்கள் சம வாக்குகள் பெறும் நிலைமை ஏற்பட்டால், முறைப்படி குலுக்குச் சீட்டு மூலம் முடிவு கண்டு---உரிய விளக்கத்தோடு ஆணையாளர் அறிவிப்பார்.

12. இருவருக்குமேல் சம வாக்கு பெறும் நிலைமை ஏற்பட்டால், அப்படிச் சம வாக்கு பெற்ற தோழர்கட்கு மட்டுமே மறுதேர்தல் நடத்தி முடிவினை அறிவிப்பார்.

13. தேர்தல் துவங்கி முடியும்வரையில், எதிலும் ஆணையாளரின் தீர்ப்பே முடிவானது.

14. தேர்தலுக்குத் தேவையான சாதனங்களை, தற்போது பொறுப்பிலுள்ள வட்டச்செயலாளரைக் கேட்டுப் பெறுவார்.

15. தேர்தல் குறித்து மற்ற விவரங்களுக்குக் கழகச் சட்ட திட்டம்---தேர்தல் விதிமுறைகளின்படி ஆணையாளர் செயல்படுவார்.

— தலைமைக் கழகம் (தி.மு.க.)

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**"இதுவரையில் இந்தியாவுக்கு சோவியத் இரஷ்யா ரூ. 900 கோடிக்கு ஆயுதங்களை வழங்கியிருக்கிறது ; ஆனால், பாகிஸ்தானுக்கு இரஷ்யா தர ஒப்புக் கொண்டதாகக் கூறப்படும் ஆயுதத்தின் மதிப்பு ரூ. 30 கோடியேயாகும்.**

**"நாம் பெற்றுள்ளவைகளுடன் ஒப்பிடும்போது, இந்த ரூ. 30 கோடிக்கான ஆயுதங்கள் மிகச் சொற்பமானதாகும்"**

இவ்வாறு முதிர்ந்த காங்கிரசுக்காரரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அர்சுன் அரோரா, இந்திய—சோவியத் கலாசாரக் கழகத்தின் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

## விண்வெளியில் செல்லும் அட்டைப் பூச்சிகள்

பிராங்க்பர்ட் (டாட்)— மனித இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் அட்டைப் பூச்சிகளைப் பிடித்து விண்வெளிக்கு அனுப்பிவிட மேற்கு ஜெர்மனியின் விஞ்ஞானிகள் தீர்மானித்திருக்கிறார்கள். அட்டைப் பூச்சியின் மீதுள்ள பகைமை காரணமாக அல்ல—பரிசோதனைக்காகத்தான் !

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) [illegible]